International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313
தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 05 Issue: 03 July to September 2023 www.irjtsjournal.org

# கல்லாடத்தில் சிவபெருமானின் திருநடனங்கள்

**பிரியங்கா. தி,** முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம்,அரசுக் கல்லூரி, சித்தூர் -678104, பாலக்காடு, கேரளா.

**நெறியாளர்முனைவர் ப. முருகன்,** இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை மற்றும் ஆய்வு மையம்,அரசுக் கல்லூரி, சித்தூர் -678104, பாலக்காடு, கேரளா.

**ஆய்வுச்சுருக்கம்**

நாடகத்தின் ஒருபரிணாமம் கூத்து எனக்கொள்ளலாம். கூத்தின் இன்னொருபரிணாமம் நடனம் அல்லது நாட்டியம் எனப்படும். நாட்டியம் என்பது இயக்கத்தைக் குறிக்கக்கூடியதாகும். உலகின் அனைத்து இயக்கங்களும் இறைவனில் தொடங்கிஇறைவனில் முடிவதாய் இறையடியார்கள் நம்புகின்றனர். எனவே இந்தபிரபஞ்சத்தின் இயக்கத்தினைத் தொடங்கியதும் ஆதிப்பரம் பொருளாகிய சிவபெருமான் என்று சைவஆகமங்கள் வலியுறுத்துகின்றன. உலகம் உய்விக்கநடனமாடி அருளிய சிவபெருமான் ஆடல்கலைக்குநாயகனாகவும் போற்றப்படுகின்றார். திருக்கோவையாரைமூலமாகக் கொண்டு எழுந்த சைவ இலக்கியமானகல்லாடம், ஈசன்நிகழ்த்திய கூத்துக்களுள் சிலவற்றை அகப்பொருட்துறைகளின் வாயிலாகதெள்ளிதின் விளக்கியுள்ளது. அவற்றை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் முதன்மைநோக்கமாகும்.

**முன்னுரை**

கலைகளில் சிறந்தது நாட்டியக்கலையே என்பது தமிழ் வழக்கு. சிவனின் ஒரு தோற்றமான ஆடலரசன் (நடராசன்) உருவம் உலகப்புகழ் பெற்றதாகும். இந்த ஆடலரசன் உருவம் தொன்மை வாய்ந்ததன்று. சைவ நாயன்மார் காலத்தில் உருக்கொண்டு பிற்கால சோழர்காலத்தில் மிகப்பெரிய அளவில் பரவிய ஒன்றாகும். ஆடலும் பாடலும் தொடக்ககாலத்திலிருந்தே தமிழர்வாழ்க்கையுடன் ஒன்றிப் போயிருந்தமையைத் தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் தெளிவுறவிளக்குகின்றன. முத்தமிழில் இயலைவிட இசை இனிமையானது. இயல், இசை இரண்டையும் விடநாடகத் தமிழ் உயர்வானது. காரணம் அதில் இயல், இசை இரண்டும் கலந்திருப்பதுதான். எனவே சைவ இலக்கியங்களும் புராணங்களும் சிவபெருமானின் கூத்துக்களை இவ்வுலகிற்கு எடுத்துரைக்க முற்பட்டன. அதன் விளைவாக சோழர்காலத்தில் இயற்றப்பட்ட சைவப்பனுவலானகல்லாடத்திலும் எம்பெருமான் ஆடியதிரு நடனங்கள் சிலவற்றை நடனமற்றும் தாளவிதி முறைகளுடன் காணமுடிகிறது.

சிவபெருமானுக்குவழங்கப்பட்டபலபெயர்களுள்மிகவும்சிறப்புபெற்றபெயர்நடராசர்என்பதாகும் . நடராசர்என்பது 'ஆடல்அரசு' அல்லது 'கூத்தபிரான்' என்றுபொருள்படும். ஆக்கல், அழித்தல், காத்தல், அருளல், மறைத்தல் எனும் உலக இயக்கத்துக்கு மூலமான ஐந்து தொழில்களும் நமசிவாய எனும்



© 2023, IRJTSR 

ஐந்தெழுத்தால் நிகழ்கின்றன. இந்த ஐந்தெழுத்தும் பரமசிவனாரின் திருமேனியாகவே விளங்குகின்றது. அவரோ, பூலோகம் முழுவதும் அனைத்து நலன்களையும் பெற்றுச்சிறக்கும் விதம், ஐந்தொழில்களைதமது ஆடலால் நிகழ்த்துகிறார் என்று ஞானநூல்கள் எடுத்துரைக்கின்றன. இதற்குச்சான்றாக உண்மை நெறிவிளக்கத்தில்,

**"சேர்க்கும் துடிசிகரம் சிககெனவாவீசுகரம்**
**ஆர்க்கும்யகரம் அபயகரம்- பார்க்கில் இறைக்கு**
**அங்கிநகரம் அடிக்கீழ்முயலகனார்**
**தங்கும்மகரம் அதுதான்"** **(உண்மை.விளக்கம்-33)**

என்றபாடல் அமைகிறது. இவ்வாறு உலகமும் உயிர்களும் உய்வடைய இறைவன் ஆடும் எல்லையில்லாத கூத்துக்களை, பலவாறுநுட்பமாக ஆராய்ந்து இறையருளை எண்ணி அவற்றுக்கு பெயரும் சூட்டியுள்ளனர் ஆடற்கலைவல்லுனர்கள்.

**சிவபெருமான் ஆடியகூத்து வகைகள்**

ஆனந்ததாண்டவம் தொடங்கிபிரளயதாண்டவங்கள் வரை, நூற்றியெட்டுதாண்டவங்களை சிவபெருமான் ஆடியிருப்பதாக வேதங்களும், புராணங்களும் தெரிவிக்கின்றன. இதில் அவர் மட்டும் தனித்து ஆடியவை நாற்பத்தெட்டு, தேவியோடுமுப்பத்தாறு, திருமாலுடன் அல்லிதாண்டவம், குடதாண்டவம், மல்தாண்டவங்கள் என ஒன்பது, முருகப்பெமானுடன் குடைதாண்டவம், துடிதாண்டவம் என மூன்று, தேவர்களுக்காக ஆடியதுபன்னிரெண்டு எனநூற்றியெட்டு திருநடனங்கள் கணக்கிடப்பட்டுள்ளது.

கூத்த நூல் என்னும் ஆடற்கலையை விவரிக்கும் நூல்சிவபெருமானின் கூத்துக்களைப் பற்றி விரிவாகக் கூறுகின்றது. அந்நூலில் பெருமான் ஆடும் பன்னிரண்டுகூத்துக்கள் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. அவை அல்லியம், எல்லியம், பல்லியம், உள்ளம், நுதல்விழி, நுதல்கால், நோக்கம், நுணுக்கம், கால்வரி, பேய்வரி, களிற்றுரி மற்றும் நச்சம் என்பனவாகும். இவையாவுமே பல்வேறு தலங்களில் பல்வேறு காலங்களில் சிவபெருமானால் ஆடப் பெற்றவையாகும்.

**"வாழ்வின் சீர் தன்மையை, மரணத்தை, பிரபஞ்சத்தை, அதுகாணும் மாற்றத்தை உலகோர்க்கு உணர்த்தும் குறியீடாகவே சிவதாண்டவம் அமைந்துள்ளது" (சைவம் – ஓர் வாழ்க்கை நெறி, ப.20),**

என சி. எஸ். தேவநாதன் விளக்குகிறார்.

நடராசப்பெருமான் திருநடனம் ஆடிய சிறப்பான திருத்தலங்களாக, சிதம்பரம் - கனகசபை, மதுரை - வெள்ளிசபை, திருநெல்வேலி - தாமிரசபை, திருக்குற்றாலம் - சித்திரசபை, திருவாலங்காடு – இரத்தினசபை என ஐந்து சபைகள் கூறப்படுகின்றன. சிவபெருமானின் பன்னிருகூத்துக்களுள் தில்லைவனத்தில் ஆடிய அல்லியக்கூத்தும், ஆலவனத்தில் (திருவாலங்காடு) ஆடிய நுதல்கால்கூத்தும்


© 2023, IRJTSR 

குறிப்பிடத்தக்கவை. இவர் நுதல்கால்கூத்து எனப்படும் ஊர்த்துவதாண்டவத்தை ஆடிய பொழுதுகாளி கண்டுகளித்தாள் என்னும் செய்தியை,

**“இறைவன் ஆடல் கண்டருளிய அணங்குக”**(சிலம்பு. வழக்குரை காதை.37-38)

என்று சிலப்பதிகார வழக்குரைக்காதை கூறுகின்றது.

கல்லாடரால் இயற்றப்பட்ட சைவப் பனுவலானகல்லாடத்திலும் ஈசன் ஆடிய நூற்றியெட்டு கூத்துகளுள் சிலவற்றைக் காணமுடிகிறது. அல்லியம் (ஆனந்ததாண்டவம்), எல்லியம் (சந்தியாதாண்டவம்), கால்வரி (கொடுகொட்டி), நாடகக்கூத்து, பாண்டரங்கம் போன்ற ஆடல்களை அகப்பொருட்துறைகளைப் பயன்படுத்திகல்லாடர் விளக்கியுள்ளார்.

**அல்லியம்**

அல்லியம் என்பது காலை வேளை தொடங்கக்கூடிய அதிகாலைப் பொழுதைக் குறிப்பதாகும். அல்லியம் என்பதற்கு இருள்விலகும் நேரம் என்பர் (அல்-இருள்). இந்த வேளையில் எம்பெருமான் கொட்டம் எனும் கூத்தினை ஆடுவதாகப் புராணநூற்கள் குறிப்பிடுகின்றன. இது, உலக உற்பத்தியையும் மகிழ்ச்சியையும் குறிக்கும் நடனம் ஆதலால், ஆனந்தத்தாண்டவம் என்றும் அழைக்கப்படுகிறது. இறைவனின் ஐந்தொழிலையும் குறிக்கும் ஆனந்ததாண்டவம் பொன்னம் பலமாகியசிதம் பரத்தில் நடை பெறுகின்றது. இச்சபையை கனகசபை என்பர்.

**"நடராசப்பெருமான் திருநடனம் ஆடியசிறப்பான திருத்தலங்களாக, சிதம்பரம் - கனகசபை, மதுரை - வெள்ளிசபை, திருநெல்வேலி - தாமிரசபை, திருக்குற்றாலம் - சித்திரசபை, திருவாலங்காடு – இரத்தினசபை என ஐந்து சபைகள் கூறப்படுகின்றன" (ஆடவல்லானின் ஆனந்தநடனம் - கட்டுரை),**

என்று கி.ஸ்ரீதரன் உரைக்கும் கருத்து இங்கு ஏற்புடையதாக உள்ளது.

கல்லாடத்தில் தில்லைச்சிற்றம்பலத்தான் ஆனந்ததாண்டவம் ஆடியநிகழ்வானது 'செலவு நினைத்து உரைத்தல்', மற்றும் 'ஆயத்து உய்த்தல்' ஆகிய இரு அகத்துறைகளின் வாயிலாகப் பதியப் பெற்றுள்ளது. பொன்னம்பலத்தில் பதஞ்சலி மற்றும் வியாக்கிரபாதர் என்ற இரண்டு முனிவர்களுக்காக இடக்கை, படகம், சல்லரி, முழவம், துடி, தண்ணுமை, கல்லவடத்திரள், ஒருவாய்கோதை போன்ற இசைக்கருவிகள் முழங்க எம்பெருமான் அல்லியம் எனப்படும் ஆனந்ததாண்டவத்தினை ஆடினார் என்பதை,

**"புண்ணியம் தழைத்த முன் ஓர் நாளில்,**
**இருவிரல் நிமிர்த்துப்புரி வொடு சேர்த்தி,**
**குழை உடல் தலைவிரிகைத் தரிகறங்க**
**............................................................**
**............................................................**

**கல்லவடத் திரள்விரல் - தலைகறங்க,**
**மரக்கால் அன்ன ஒருவாய்க்கோதை**

**முகத்திலும் தட்ட, மூக்கினும் தாக்க,**
**நாடு இருமுனிவருக்கு ஆடிய பெருமான்" (கல்.பா.8:10-29)**

என்னும் அடிகளில் கல்லாடர்பதிவு செய்கிறார். இறைவன் இங்கு இடதுகாலை ஊன்றிவலதுகாலைத் தூக்கி நான்கு கரங்களுடன் நடனமாடுகின்றார். இத்தலத்தில் இறைவன் பொன்னம்பலவாணன், நடராஜன், கனகசபாபதி, அம்பலவாணன், ஞானக்கூத்தன் என்றெல்லாம் அழைக்கப்படுகின்றார். மேலும், ஆனந்தக்கூத்துஎன்னும் இக்கூத்தை ஆடுங்கால் உமையம்மையார் தருவதற்கு இயன்றதாளத்தை- ஈசன் பிடித்துள்ள உடுக்கையில் கட்டப்பட்டுள்ள ஒளி மணியானது தரவும், அதற்குரிய சுருதியைதும் புரு மற்றும் நாரதர்தத்தம்யாழில் ஏழிசைகளாக இசைத்துக் காட்டிடவும், எம்பொருமான் ஆடிமகிழ்ந்தார் என்னும் செய்தியை,

**"பார்ப்பதிப் பாணியைத்துடி மணி எடுப்ப,**
**சுருதியைத் தண்டி வலி கொண்டு அமைப்ப,**
**முதல் ஏழ் – அதனை ஒன்றினுக்கு ஏழ் என**
**வீணைபதித்துத் தானம் தெரிக்க,**
**முன்துடி மணியில் ஒற்றிய பாணியை**
**நாதம் கூட்டிமாத்திரை அறுத்து" (கல்.பா.63:32-37)**

என வரும்கல்லாடச் செய்யுள்விளக்குகின்றது. இந்நடனம் பற்றிய செய்திகள் திருமூலர் திருமந்திரத்தில் திருக்கூத்து தரிசனம் (9-ஆம் தந்திரம்), உமாபதி சிவத்தின் உண்மை விளக்கம், குமரகுருபரரின் சிதம்பர மும் மணிக்கோவை ஆகிய நூல்களில் காணப்படுகின்றன.

**எல்லியம்**

எல்லியம் என்பது பகல்மறைந்து இரவு தோன்றக் கூடியசந்தியா நேரத்தைக் குறிப்பதாகும். இவ்வேளையில் இறைவன் ஆடக்கூடிய நடனம் சந்தியாதாண்டவம் என அழைக்கப்படுகிறது. மதுரையில் பெருமான் சந்தியாதாண்டவத்தை ஆடிக் கொண்டிருக்கின்றார் என்பது வரலாற்றுச் செய்தி.

சிவபெருமானின் திருவிளையாடல்கள் பெரும்பாலும் நடை பெற்ற இடமாக மதுரை திருத்தலம் திகழ்கின்றது. மீனாட்சி அம்மனின் அரசாட்சியும், அருளாட்சியும் நிறைந்திருக்கும் மதுரையில் தான் மதுரைமீனாட்சி – சுந்தரேஸ்வரர் கோவில் உள்ளது. இந்த ஆலயம் தான் நடராஜரின் திருநடனம் கண்ட வெள்ளிசபையாகத் திகழ்கிறது. இதனை 'வெள்ளியம்பலம்', 'வெள்ளிமன்றம்' என்றும் அழைப்பார்கள். இந்த ஆலயத்தில் அருள்புரியும் நடராசப்பெருமான், தன்பக்தனான பாண்டிய மன்னனின் வேண்டு கோளுக்கு செவிசாய்த்து, வலதுகாலை ஊன்றி, இடது காலைத்தூக்கி நடனம்புரியும் நிலையில் காட்சிதருகிறார்.

**"பொன்னம்பலம், தாமிரசபை, சித்திரசபை, இரத்தினசபை ஆகிய நான்குசபைகளிலும் இடதுகாலைத் தூக்கி நடனம் ஆடும்சிவன், மதுரையில் வெள்ளியம் பலத்தில் மட்டும் வலதுகாலைத்தூக்கி நடனமாடுகிறார்" (பஞ்சசபைகளில் நடராசர் தாண்டவம் - கட்டுரை),**

என்னும் க. ஈஸ்வரியின் கூற்று இங்கு பொருத்தமாக உள்ளது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*
© 2023, IRJTSR

இதனை 'மகிழ்ந்து உரைத்தல்', 'காமம் மிக்ககழிபடர்கிளவி', 'வெறிவிலக்கல்', 'அல்லக்குறி அறிவித்தல்' போன்ற துறைகளின் வாயிலாகக்கல்லாடர் எடுத்துரைக்கின்றார்.

**"பஞ்சவன் நிறைந்த அன்புடன் வேண்ட**
**மாறிக்குணித்த நீறு அணி பெருமாற்கு"** (கல்.பா.24:33-34)

எனவரும்பாடல் அடிகளில் பாண்டியமன்னன் அன்புடனே வேண்டிக் கொண்டதால் திரு நீறு அணிந்த சிவபெருமான் கால்மாறி ஆடியதாகக்குறிக் கப்பட்டுள்ளது. மேலும், இத்தாண்டவத்தைப் பற்றிகல்லாடர் குறிப்பிடுகையில், தேவர்கள் அனைவரும் ஆனந்தமாக கண்ணீர் சொரிய, முனிவர்கள் எல்லாம் வாய்குழற, கல்லவடத்திரள் என்ற கருவியும், அழகிய வாயினை உடைய தண்ணுமை என்னும் கருவியும், ஒரு கட்பறையாகிய மொந்தை என்னும் கருவியும், கல்லலகு என்னும் கருவியும், துத்தரி என்னும் கருவியும் முழங்க வெள்ளியம் பலத்தில் எம்பெருமான் கால்மாறி ஆடியதாக 'அல்லக்குறி அறிவித்தல்' என்னும் துறையில் சிறப்பித்துக் கூறியுள்ளார். இதனை,

**"தேவர்கண்பனிப்ப, முனிவர்வாய்குழற,**
**கல்லவடத்திரள், மடிவாய்த்தண்ணுமை,**
**மொந்தை, கல்லலகு, துத்தரி, ஏங்க,**
**கட்செவிசுழல, தாழ்சடைநெறிப்ப,**
**இதழிதாது உதிர்ப்ப, பிறை அமுது உகுக்க,**
**வெள்ளி அம்பலத்துள் துள்ளிய பெருமன்" (கல்.பா.33:8-13)**

என்னும் அடிகள் புலப்படுத்துகின்றன.

**பேய்வரி**

பேய்வரி என்பது பண்டரம் என்னும் சுடுகாட்டில் சிவபெருமான் பேய்களுடன் ஆடிய நடனத்தைக் குறிப்பதாகும். இது பூததாண்டவம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த தாண்டவம் நவதாண்டவம் மற்றும் பன்னிருதாண்டவங்களுள் ஒன்றாக அமைந்துள்ளது. இந்நடனத்தை எம்பெருமான் திருவெண்காட்டில் ஆடுகின்றார் என சைவ இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. திருவெண்காடானது சுவேதவனம் என்றும், பிரம்மமசானம் என்றும், ஆதிசிதம்பரம் என்றும் அழைக்கப் படுவது இங்கே சிந்திக்கத்தக்கதாகும்.

யானைவடிவில் வந்த அரக்கனை கொன்று, யானையின் தோலினை உடலில் போர்த்தி சிவபெருமான் ஆடியநடனம் பூததாண்டவமாகும். இந்ததாண்டவம் நவராத்திரியின் ஏழாவது நாளில் சிவபெருமானால் ஆடப்படுகிறது.

**"சிவனது திருக்கூத்து, அவருடைய சக்தி எங்கும் பரவியிருப்பதை, அவர்சர்வவியாபியாய் விளங்குவதை நமக்கு வெளிப்படுத்துகிறது" (சைவம் - ஓர்வாழ்க்கைநெறி, ப.20),**

என்று சி.எஸ்.தேவநாதன் கூறுவது இங்கு ஏற்புடையதாகும்.

கல்லாடத்தில் 'தூதுகண்டு அழுங்கல்', 'நற்றாய்வருந்தல்' ஆகிய துறைகளில் பூதத்தாண்டவம் பற்றிய குறிப்புக்களைக் கல்லாடர் வெளிப்படுத்தி உள்ளார். பல்வேறு வகையான இசைக்கருவிகள் ஒலிக்க, பேய்கள் உடன் நின்று ஆடசுடு காட்டில் இறைவன் ஆடிய ஆட்டத்தை,

**"ஏழ் இசை முதலில் ஆயிரம் கிளைத்த**
**கானம்காட்டும்புள்- அடித்துணையினர்**
**………………………………………………**
**………………………………………………**
**பூரகம், கும்பகம், புடைஎழுவிளரி,**
**துத்தம், தாரம், கைக்கிளை, அதனுக்கு**
**ஒன்றிணுக்கு ஏழு நின்று நனிவிரித்து,**
**தனிமுகம் மலர்ந்துதம் இசைபாட,**
**கூளியும் துள்ள ஆடிய நாயகன்"** (கல்.பா.9: 11-30)

என வரும் கல்லாடவரிகளால் அறிய முடிகிறது. இப்பகுதியில் இறைவன் நடனம் ஆடும் போது ஏழ்பெரும்பாலைப் பண்கள், நெய்தல்பண், செவ்வளிப்பண், முல்லைப்பண் ஆகிய பண்கள்யாழிலே இசைக்கப் பட்டதாகக் குறிக்கப்பிடப் பட்டுள்ளது. மேலும், 'நற்றாய்வருந்துதல்' எனப்பெயரியதுறையில், சுடுகாட்டில் உமையவள்பாடவும், பேய்கூட்டங்கள் உடன் கூத்தாடவும் கூத்தாடியவர் சிவபெருமான் என்று சிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனை,

**"திசை நின்று எழாது, தழல் முகம் தெறிப்ப,**
**சுடலையில், சூறை இடை இடை அடிக்கும்**
**பேர்அழற்கானினும், நாடும் என் உளத்தினும்,**
**ஒரு பால் பசுங்காகொடி நிறை பாட்டு அயர,**
**பாரிடம் குனிப்ப, ஆடிய பெருமான்"** (கல்.பா.7:30-33)

என்னும் செய்யுள் அடிகள் தெரியப்படுத்துகின்றன.

**நுதல்கால்**

சிவபெருமான் தனது ஒரு திருவடியை (ஊர்த்துவமுகமாக) வானை நோக்கி உயர்த்தி ஆடிய அற்புததிருநடனம் நுதல்கால் கூத்து எனப்படுகிறது. இக்கூத்தை ஊர்த்துவதாண்டவம் என்றும் அழைப்பர். ‘காளி தேவியின் கர்வத்தைப் பங்கம் செய்யசிவனார் ஆடியதாண்டவம் ஊர்த்துவதாண்டம்’ என்கின்றன புராணங்கள். சிவ பிரான் இந்ததாண்டவத்தை அருளிய திருத்தலம் திருவாலங்காடு ஆகும். இத்தலத்ததை இரத்தினசபை என்றும் சிறப்பித்துள்ளனர். இங்கே ஊர்த்துவதாண்டவர் கோலம் சிறப்புறத் திகழ்கின்றது.

கல்லாடர் 'ஆயத்துஉய்த்தல்' என்னும் அகப்பொருட்துறையின் வாயிலாக இந்நாட்டியத்திற்குரிய தாளவகைகளையும் நடனவிதி முறைகளையும் விரிவாகவிளக்கியுள்ளார்.

**'வடவனத்து ஒருநாள் மாறுபட்டு எதிர்ந்து**
**வழி நடம் தனது மரக்கால் அன்றி,**
**முதல் தொழில் பது மன்முன்னாய், அவ்உழி**
**………………………………………………………**
**………………………………………………………**

**வளவை இடாகினிமண் இருந்து எடுத்த**
**காலுடன் சுழல ஆடியகாளி**
**நாணி நின்று ஒடுங்க,…………………" (கல்.பா.63:1-25)**

என வரும் கல்லாடச் செய்யுளடிகளில் புத்திரி, சச்சபுடம், வன்மம், பிதா ஆகிய தாளங்களிற்கேற்ப மான்தலை மற்றும் கும்பம் என்னும் முத்திரைகளைப் பிடித்து சிவபெருமான் தாண்டவம் ஆட, நிலத்திலிருந்து தூக்கியகாலுடன் கூத்தாடிய இடாகினி என்று கூறப்படுகின்ற பெயரையுடையகாளியானவள் நாண முற்றுக்கூத்தாடுதலை நிறுத்திதனக்குத் தோற்றுதலைக் கவிழிந்து நின்றாள் என்னும் செய்திபதியப் பெற்றுள்ளது.

**கொடு கொட்டி**

சிவபெருமான் முப்புரங்களை எரித்த போது, அது எரி மூண்டு எரி வதைக்கண்டு வெற்றிக்களிப்பில் ஆடிய கூத்து கொடு கொட்டி என அழைக்கப்படுகிறது. இதனை சிலப்பதிகாரம்,

**"பாரதியாடிய பாரதி அரங்கத்துத்**
**திரிபுர மெரியத் தேவர் வேண்ட**
**எரிமுகப் பேரம்பு ஏவல் கேட்ப**
**உமையவளொருதிறனாக வோங்கிய**
**இமையவன் ஆடிய கொடு கொட்டி ஆடலும்" (சிலம்பு.கடலாடுகாதை:39-43)**

என விளக்கியுள்ளது.

தேவர்கள் திரிபுரமெரிய வேண்டியதால் இமையவனாகிய சிவன் திருமாலை அம்பெனத் தொடுத்து திரிபுரமெரியச்செய்கிறார். அதில் சிக்கியதாரகாட்சகன், கமலாட்சன், வித்துவன்மாலி ஆகிய அசுரர்கள் வெந்து விழுந்த சுடுகாட்டிலேபைரவியாம் உமையவள் தாளத்துடன் பாட இறைவன் வெற்றி ஆனந்தத்துடன்கை கொட்டி ஆடியது கொடு கொட்டி ஆட்டம் எனப் படுகிறது. திரிபுர மும்தீப் பற்றி எரிய அதனைக்கண்டு மனமிறங்காதுகை கொட்டி ஆடிய கொடுமையான ஆட்டம் ஆதலால் இது கொடுங் கொட்டி எனப் பெயர் பெற்றது. "கொடுங்கொட்டி 'கொடுகொட்டி' என விகாரமெய்திநின்றது", என்று அரும்பத உரையாசியர் குறிப்பிடுவதும் இங்கு கவனிக்கத்தக்கது. இதனைக் 'கொட்டிச்சேதம்' என்றும் அழைப்பர்.

கல்லாடத்தில் 'நின்குறைநீயே சென்று உரை என்றல்' மற்றும் 'வேறு படுத்திக்கூறல்' என்னும் துறையில் அமைந்த செய்யுட்களில் இக்கூத்து பற்றிய செய்தி காணப்படுகிறது.

**"……………………………… அர்ச்சனைவிடுத்த**
**வெள்ளமுரண் அரக்கர்கள்ளமதில் மூன்றும்,**
**………………………………………………………**
**………………………………………………………**
**ஏழ் உயர்வானம் பூழிபடகருக்கி,**
**அர்ச்சனைவிடாது, அங்கு, ஒருப்படும் மூவரில்**
**இருவரைக்காவல்மருவுதல் ஈந்து,**
**மற்று ஒருவருக்கு வைத்தநடம் அறிந்து**
**குடமுழவு இசைப்பப் பெறும் அருள் நல்கி" (கல்.பா.26:16-32)**

என வரும் இப்பகுதியில், முப்புரங்களைக் கொண்ட அரக்கர்களின் தீயநடவடிக்கைகளை அழிப்பதற்காக சிவபெருமான் தேரில் வில்லுடன் சென்று, தன் புன்சிரிப்பினால் அக்கோட்டைகளை அழித்த செய்தியும், அழித்த பின்னர் அம் மூன்று அரக்கர்களுக்கும் அருள் செய்து, அதில் ஒருவரானவாணாசுரனுக்குதன் ஆட்டத்தைக் காணும் திருவருள் புரிந்ததும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது.

**"கலித்தொகைகடவுள் வாழ்த்துப் பாடலில் சிவன் கொடு கொட்டி ஆடியகுறிப்புக் காணப்படுகிறது. சிலம்பில் மாதவிதன் உடம்பில் ஒருபகுதி சிவனாகவும் மறுபகுதி உமையவளாகவும் வேடம் பூண்டு ஆடிய செய்தி உணர்த்தப்படுகிறது" (பதினொருவகை ஆடல்கள் - கட்டுரை),**

என்ற வீ.முத்துலட்சுமியின் கருத்து குறிப்பித்தக்கது. மேலும், 'வேறுபடுத்திக்கூறல்' எனப் பெயரியதுறையில்,

**"வெள்ளி, இரும்பு, பொன்எனப்பெற்ற
மூன்றுபுரம்வேவ, திருநகை விளையாட்டு,
ஒருநாள், கண்டபெருமான்,..."(கல்.பா.23:40-42)**

என்னும் வரிகளின் வாயிலாக, ஈசன்தன் அழகியசிரிப்பால் வெள்ளி, இரும்பு, பொன் என்ற சொல்லும் படி பெயர் பெற்ற முப்புரங்களும் வேகும்படி விளையாட்டு கொண்டார் என்பது விளக்கப்பட்டுள்ளது. இக்கூத்தை ஆடியதன் மூலம் இவருக்கு 'முப்புரம் எரித்தவர்' என்ற பெயரும் வழங்கப் பெறலாயிற்று.

**நாடக்கூத்து**

சிவபெருமானின் எண்ணற்ற கூத்துக்களுள் நாடகக்கூத்தும் ஒன்றாகும். கல்லாடத்தில் 'தன்னுள்கையாறு எய்திடுகிளவி' என்னும் துறையிலுள்ள செய்யுட்பகுதியில் எம்பெருமான் நிகழ்த்திய நாடகக் கூத்து பற்றியும், அக்கூத்ததை ஆடுவதற்குரிய விதிமுறைகள் குறித்தும் தெள்ளிதின் எடுத்துரைக் கப்பட்டுள்ளது. இதனை,

**"அருவி ஓசையும், முழவின் முழக்கமும்
வலம்புரிச்சத்தமும் வெருகின் புணர்ச்சியும்,
இன்னும் என்று இசைப்பபன்னியவிதியொடு,
மந்திரம், மத்திமம், தாரம் இவைமூன்றில்
துள்ளல், தூங்கல், தெள்ளிதின்மெலிதல்,
கூடியகானம் அன்பொடுபரவ,
பூதம்துள்ள பேய்கை மறிப்பஎங்கும் உள
உயிரும் இன்பம்நிறைந்து ஆட,
நாடக – விதியொடு ஆடியபெருமான்" (கல்.பா.22:53-61)**

என்னும் செய்யுளடிகளால் அறிய முடிகின்றது. இதற்குச் சான்றாக, திருவாசகத்தில் திருச்சதகப்பாடல் ஒன்றும் அமைந்துள்ளது.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு*
© 2023, IRJTSR

**"கழு தொடுகாட்டிடை நாடக**
**மாடிக்கதியிலியாய்"** **(திருவா.திருசதகம்:7:5-6)**

என்ற இடத்தில் மாணிக்கவாசகர், சுடுகாட்டில் சிவபெருமான் பேயோடு நாடகக்கூத்தினை ஆடியதைவருணிக்கின்றார். இங்ஙனம் ஈசன் மயானத்தில் நடன மாடுவதால் தான் அவரை 'சுடலையாடி' என்று அழைக்கின்றனர்.

**முடிவுரை**

சிவபெருமானின் திருநடனம் நிலை பேறுடையதாகும். அவரது ஒவ்வொரு நடனமும் பிரபஞ்சத்தின் அம்சத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒருபிரபஞ்ச நடனமாக வேகருதப்படுகிறது. உலகத்தின் செயல் பாட்டை இறைவனின்லீலையாகக் காண்பது சைவ இலக்கியங்களின் முதன்மையான கூறாகும். ஆகவே ஈசனின் நடனமானது படைப்பு, அழிவு, பிறப்பு மற்றும் இறப்புகளின் தாளத்தை குறிக்கிறது என்று சிவனடியார்கள் கூறுகின்றனர். நம்முடைய ஆன்மாவை சிவகாமியாக எண்ணி நடராஜப்பெருமானின் நடனத்தைக் காண வேண்டும் என்பது ஐதீகம். கூத்த பிரானின் கூத்துக்கள் அனைத்தும் உலகம் சிறக்க, வளம்பெற நிகழ்த்தப்பட்டவையாகவே இன்றுவரை நம்பப்பட்டுவருகிறது. இதற்கிணங்ககல்லாடரும், தனது பனுவலில் சிவபெருமானின் சிறப்பு பெற்ற கூத்துக்களை நடனவிதிமுறைகள் மற்றும் தாளவிதிமுறைகளோடு வருணனைததும் எடுத்துரைத்துள்ளார்.

**சான்றதாரங்கள்**

[1] இராசமாணிக்கனார், மா., கலித்தொகைமூலமும்உரையும்பூம்புகார்பதிப்பகம் , சென்னை, மூன்றாம்பதிப்பு - 2012.

[2] செல்லதுரை, இ., உண்மைவிளக்கம் (உரைநூல்), அகிலஇலங்கைச்சைவப்புலவர்கள்பட்டதாரிகள்சங்கம் , முதற்பதிப்பு - 1963.

[3] தேவநாதன், சி.எஸ்., சைவம் - ஓர்வாழ்க்கைநெறி, திருமகள்நிலையம், சென்னை, இரண்டாம்பதிப்பு - 2017.

[4] முத்தப்பன், பழ., கல்லாடம் (மூலமும்உரையும்) உமாபதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 2018.

[5] பிள்ளை, கா.சு., திருவாசகம் (மூலமும்உரையும்), சைவநூல்அறக்கட்டளை, சென்னை, முதற்பதிப்பு - 1997.

[6] வேங்கடசாமிநாட்டார், நா.மு., சிலப்பதிகாரம் (மூலமும்உரையும்) ராமையாபதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 2010.

[7] யோகியார், ச.து.சு., கூத்தநூல் - உரை, சாரதாபதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 2019.

**கட்டுரை**

[1] ஜெயலட்சுமி, ச., பஞ்சசபைகளில்நடராஜர்தாண்டவம் - கட்டுரை, tamil oneindia.com.

[2] முத்துலட்சுமி, வீ., பதினொருவகைஆடல்கள் - கட்டுரை, முத்துக்கமலம்இதழ்.

[3] ஸ்ரீதரன், கி., ஆடவல்லானின்ஆனந்தநடனம் - கட்டுரை, https://www.dinamani.com.